உளி 9 | ஓசை 1 | ஜூலை 2025 | திங்களிதழ்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

www.padaippu.com

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



அரசு பதிவு எண்: 521/2018

**நிறுவனர் & ஆசிரியர்:**
ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு:**
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

**ஆசிரியர் குழு:**
படைப்பு தேர்வுக்குழுமம்

**இதழ் உருவாக்க உதவி:**
பிரபுசங்கர் க
ஷெண்பா
தி.கலையரசி

**வடிவமைப்பு:**
தேவம். ஆரோன்

**இணையதள முகவரி:**
padaippu.com

**அலுவலக முகவரி:**
படைப்பு குழுமம்
8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை 600 024

admin@padaippu.com
+91 73388 97788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

த. ரவீந்திரன் ........ 04
தனபாலன் தர்ஷன் ........ 04
கார்த்திக் கல்யாணி ........ 05
செ.பிரேமதாஸ் ........ 05
தங்கேஸ் ........ 06
காதலாரா ........ 07
ச.ஆனந்த குமார் ........ 08
கே.பாலன் ........ 09
மெஹ்ராஜ்பேகம் ........ 09
கௌ.அஸ்வின் பிரபு ........ 09
கோவை புதியவன் ........ 10
மௌனு ........ 10
வணவை தூரிகா ........ 10
சங்கரி சிவகணேசன் ........ 11
சாய் மீரா ........ 12
அன்பழகன். ஜி ........ 13
செ.ரா.கிருஷ்ணகுமாரி ........ 14
ஷப்ரா இல்முத்தீன் ........ 15
கனியமுதுஅமுதமொழி ........ 16
தி.கலையரசி ........ 17
அ.ராஜ்குமார் ........ 18
காசாவயல் கண்ணன் ........ 19
லாஸ்யா ........ 19
மின்மினி விமலா ........ 20
கதிரிளவன் இரவிக்குமார் ........ 20
செ.பிரேமதாஸ் ........ 21
ஐ.தர்மசிங் ........ 21
வினோத் பரமானந்தன் ........ 21
இரா.மதிபாலா ........ 22
ராம் ........ 22
யாழ் தண்விகா ........ 23
கோ சிவா தமிழ் ........ 23
எஸ். ஃபாயிஸா அலி ........ 24
தா.பிரபுபாரதி ........ 25
பிரபுசங்கர்.க ........ 25
சே கார்கவி கார்த்திக் ........ 26
அனீஸ் அஹமத் ........ 26
பன்னீர்செல்வம் ........ 27
அ.சீனிவாசன் ........ 27
ராணி கஸ்தூரி உடுமலைப்பட்டை ........ 28
நயினார் ........ 29
தமீம்.அசாருதீன் ........ 30
நேசன் ........ 31
எபி ........ 32
மு.முபாரக் ........ 32
ஆ.விஜயலெட்சுமி ........ 33
கலைச்செல்வி ........ 34
பாத்திமா சில்மியா ........ 35
ச.ப. சண்முகம் ........ 36
கா.வெங்கடேஸ்வரன் ........ 36
மகேஷ் சிபி ........ 37
நிஷா ராஜேஷ் ........ 38
ஆ.சார்லஸ் ........ 39



உறக்கத்தில் சிரிக்கும்
நாய்க்குட்டியின் கனவில்
எலும்புத்துண்டு..

• த. ரவீந்திரன்

தட்டத் தேவையில்லை
தள்ளினாலே
திறந்திருக்கும்...
தயக்கங்களினால்
மூடியே கிடக்கின்றன
பல
தாழிடப் படாத
கதவுகள் ...!

• தனபாலன் தர்ஷன்



## நானே நானாக...

இதயமென்பது
நினைவலைகளின்
சமவெளியாய்...

உணர்வுகளென்பது
நதி ஊற்றின்
பிரவாகமாய்...

கனவுகளென்பது
ஆற்று மணலின்
திட்டுக்களாய்...

வாழ்க்கையோ
ஏரிக்கரை ஓரத்தின்
புன்னைமரக் காடுகளாய்...

நானோ அங்கே
அமர்ந்திருக்கும்
அக்கக்கோ
குருவியாகவும்...


என் காதலும் கூட
அதன்
அடிநாதமாகவும்...

அனைத்துமே இங்கு
நாடக மேடையின்
வண்ணச் சேலைகள்
போலத்தான்.

• கார்த்திக் கல்யாணி

காற்றின் போக்கை
அனுமதிக்காத இலைகள்
குப்பைகளாக ஓரங்கட்டப்படுகின்றன
வாழ்க்கையின் போக்கை
அனுபவிக்கத் தெரியாத
நம்மைப்போலவே.....

• செ. பிரேமதாஸ்



நீ தரும் முத்தத்தை வேடிக்கை பார்க்கவே
காலம் சற்று நின்று புறப்பட
உத்தேசித்துள்ளது

படபடக்கும் சோடி வெண்புறாக்கள்
திறந்திருக்கும் வாசல் வழியே
அனுமதியின்றி நுழைகின்றன

தென்கிழக்கு உச்சி நட்சத்திரம்
ஒரு முறை இரகசியமாய்
கண்சிமிட்டி விட்டு அமர்ந்திருக்கிறது

பால்யத்தின் குளிர்ந்த நதி
விரல்களைப் பிடித்து
உள்ளே இழுத்துப் போடுகிறது

பொன்னிற மீனொன்று
உன் மீதும் என்மீதும் துள்ளி விழுந்தபடி
சன்னல் வழியே குதித்து
காணாமல் போகிறது

இப்போது நெளியும் நம் விரல்கள்
மீன்களாகி திளைக்க
காலம் ஒரு முறை
நதியாக ஒத்திகை பார்க்கிறது

• தங்கேஸ்



## வற்றிய கிணறு

அந்த வற்றிய கிணறை
பார்க்கும் பொழுதெல்லாம்

ஆறாக அழுகை விழுகிறது
ஆறாத பெருந்துயர் விரிகிறது

வஞ்சத்தின் முகம் சிரிக்கிறது
நெஞ்சத்தின் கனம் உடைகிறது

சோகம் சுமக்கும் தாகம்
கல் இடுக்கில் வளர்கிறது

வாய் பொத்தி விழும் கண்ணீர்
கன்ன சறுக்கில் படிக்கிறது

தேய்ந்து போன கைகளில்
கவலை பேய் போல் பாய்கிறது

ஓய்ந்து கிடைக்கும் மூளையில்
காய்ந்த ரத்த ஏடு படர்கிறது

துடித்து கொல்லும் இதயத்தில்
தனிமை நெருப்பே கொதிக்கிறது

வெடித்து சிதறும் உடலுக்குள்
பூமியின் தீயே கிடக்கிறது

அந்த வற்றிய கிணற்றின்
அருகில் செல்ல செல்ல
அரூப வடிவாய் சாகிறேன்
அடுத்த நொடி முடிவில்
ஆழத்தில் அழுகிக் கிடக்கிறேன்

அழுகிய என்னை எடுக்கும்
அதே நொடியில் – மேலிருந்து
அதே நான் உயிரோடு விழுகிறேன்

அடிக்கடி விழுந்து இறந்து
அழுகிக் கிடக்கும்
என்னை எடுக்க
நான் மட்டுமே இருக்கிறேன்

• காதலாரா



பிள்ளை பிடிக்கிற கிழவன்..
சாம்பிடாமல் அடம் பிடித்தால்
பிடிக்கும் ஒற்றைக்கண் பூச்சாண்டி..
தெரு முனையில்
காதெழும்பியிருக்கிற நாய்..
கண்ணை குத்தும் சாமி..
மீசையை ஆட்டியபடி
மேல் வந்தமரும் கரப்பான்
கணக்கு வாத்தியார்
நெடுநல் வாடை..
மதிப்பெண் குறைவதற்கு காத்திருக்கும்
அப்பாவின் பெல்ட்...
கால சுழற்சி.. மாறிவிட்டது
மனதின் ஓரத்தில் இன்னும் பதுங்கியிருக்கிறது
எப்போதோ விதைக்கப்பட்ட பயம்!

• ச. ஆனந்த குமார்

எத்தனை நதிகளை
விழுங்கியதோ
அன்பை இழந்த ஜீவன்கள்
கண்ணீர்
பெருங்கடலாக வழிகிறது

- மெஹ்ராஜ்பேகம்




என்னோடு தூங்கிப் போன
உன்னினைவுகளுக்கு – இந்த
அதிகாலைத் தேநீரை ஆயத்தம்
செய்து கொண்டிருக்கிறேன்...

உருவங்களற்று உட்கார்ந்து
உரையாடிக் கொண்டிருக்கும் – நம்
அருரூப ஆனந்தத்தில் ஆசை கொள்ளும்
இன்பத்திற்கு இதமாக...

காதலென்று கேள்விப்பட்டதை கடந்து
ஏதோவொன்றுக்குள் எப்போதும்
இழுத்து செல்கிறது

இப்போதெல்லாம் மௌனத்தின்
மொழிகளில் பேசிக் கொள்வது
போதுமானதாக இருக்கிறது...

சண்டையிடாமலே கோபித்துக் கொண்டு
கொஞ்சம் அழுது பார்க்க ஆசையாக இருக்கிறது...

தலைதழுவும் விரல்களுக்கு
தவமிருக்க வேண்டுகிறது

இமைமூடிய விழிகளுக்குள்
வாழ்ந்திருக்க ஏங்குகிறது...

எல்லாம் இந்த ஒரு வாழ்விலே
வாழப் பட்டுவிட்டால் இன்னொரு
ஜென்மம் இனி வேண்டாம்...

உனக்கும் எனக்கும்...

- கே.பாலன் – வடக்கத்தியான்



பட்டி

கண்ணீர் துடைக்கவென்று
ஒற்றைக் கரம் கூட
இல்லாதிருந்த
அந்த ஊரைத்தான் இன்னும்
'சொந்த ஊர்' என்று
சொல்லிக் கொண்டிருக்கிறாள்
அம்மா....!

• கௌ.அஸ்வின் பிரபு

அறுக்கப்பட்ட மரம்
பறந்த துகள்கள்
வேர்களின் கண்ணீர்

• கோவை புதியவன்

அன்பை
அள்ளிக்கொடுக்கும் அளவிற்கு
அள்ளிக்கொள்ள முடியவில்லை,
நேசித்தவர்களிடமிருந்து....!!!

• மௌனு

சொந்த வீடற்றவன்
இடம் மாறும் வாடகை வீடுகளெங்கும்
வைத்துக் கொண்டே செல்கிறான்

குருவிகளுக்கான கூடுகளை...!!

• வணவை தூரிகா



அது ஒரு பேரினவாதப் பேயாட்டம்
நிஜத்தின் இருள்தாண்டவம்
அன்னியமாக்கப்பட்டவர்களின்
அனிச்சை தேசம்..

மனித மமாமிசம் புசிக்கத் திரிந்த
பேரினவாத விலங்குகளிடம்
ஓடத்தெரியாத மான்கள்
மாட்டிக்கொண்ட
இனவாதம் மீந்தகாலம்..

கூட்டு வண்புணர்வு
நிர்வாணக் கொலைகள் என
ஒரு துயரிசையை மீட்டிய அகாலம்..

வெறும் எலும்புக் கூடுகளாய் மிஞ்சிய
மண்ணிலிருந்து உயிர்த்தெழும்
நினைவுகளின் வேகம்
காலத்தைக் கடக்க முடியாத அவலம்..

காலத்தின் கோரைப் பற்களிலிருந்து வெளியேறும்
இரத்தத்தை
வெறு கறைகளென
கழுவிட முடிவதில்லை..

நீதியில்லா நாட்டில்
சமநிலை இல்லாத வாழ்விற்கு
சபிக்கப்பட்ட ஏதிலி நாம்..

எம் கதையை தொடர்ந்து பேசுவோம்
உலகத்தின் காதுகளில் சேர்ப்போம்..

• சங்கரி சிவகணேசன்



ஓடும் தூரம்வரை
ஓடி விட்டேன்

நடக்கும் தூரம்வரை
நடந்து விட்டேன்

அடுத்ததொரு அடி
எடுத்து வைக்கும்
திராணியற்று
என் கால்களைக் கைகளால்
தழுவிக்கொண்ட படி
அமர்ந்து விட்டேன்

கடைசி சொட்டு
நீலமும்
உறிஞ்சப்பட்டுவிட்டபின்
வெற்றுப் பேனாக்களோடும்
வெளிறிய காகிதமாய்
இவ்விழிகளோடும்
என்ன செய்வதென
அறிவதற்கில்லை

எதிர்பார்ப்புகளற்ற
ஒரு நாளின்
அர்த்தமுள்ள சூரியன்
தன் கதிர்களால்
எனை அரவணைத்துக் கொண்டால்
இந்த உயிர் குடிக்கும்
ஓர் இருளை
நான் வெல்லக்கூடுமோ
என்னவோ

• சாய் மீரா



## பிறாண்டும் எலி

சாலையில் இடதுபுறம்
நொருங்காத அப்பளமாக
ஒரு பூனை கிடக்கிறது.
வாகனங்கள் தொடர்ந்து
ஏறி மிதிக்கின்றன.
கத்தாமல் கிடக்கிறது
வலி வந்தால்தானே நோவு.

பதறாய் விழும்
இழி சொற்கள்.
என்ன செய்து விடும்
என்னை

எப்போதேனும்
பூனை எழுந்து பூனை
ஓடக்கூடும்.
அதற்கான சந்தர்ப்பம்
சாதகமாகும்போது.

- அன்பழகன். ஜி



சொற்களின்றி
கைவிடப்பட்டக் கவிதையில்
காதல் இருக்கிறது

தனிமையில் இருந்தவளிடம்
வந்து சேர்ந்த வார்த்தைகள்
பசியில் இறந்தவரின் முன்
படையல் போட்டு நிற்கின்றன

கூடு கட்ட தெரியாதவனிடத்தில்
கிடைத்த அன்புக்குச்சிகள்
உடைந்து விழுந்தன
காலத்தீயில்

கால்களை நனைக்காமல் சென்ற அலைகளைக்
கடிந்துக்
கொள்ளப் போவதில்லை

பிரிவுச் சொற்களை தேடி
அன்பு வெளியில் திரிகிறேன்
சொற்களும் கவிதையும் எப்போதும் சேர்வதில்லை
இவளுக்கு.

• செ.ரா.கிருஷ்ணகுமாரி



அத்தனையையும்
செய்த பின்னர்
யோசிக்கும் குணம்
எப்போதும் நீங்குவதில்லை
மனிதர்களை விட்டும்

சட்டென
முகத்தில் அறைந்தாற் போல்
பேசி விட்டு
ஏன் தான் பேசினோமென
யோசிப்பதும்

திடீரென அடுத்தவருக்கு
சிரமங்களை கொடுத்து விட்டு
ஏன் தான் இப்படி செய்தோமென
தலையில் கை வைப்பதும்

நொடிப்பொழுதில்
பிறரை காயப்படுத்தி விட்டு
ஏன் தான் காயங்கள்
கொடுத்தோமோ என
சிந்திப்பதும்

தோன்றும் போதுகளிலெல்லாம்
நம் இஷ்டத்துக்கு நடந்து
அடுத்தவர்களை
அகங்காரத்துடன் பார்த்து விட்டு
எதற்காய் இப்படி
செய்தோமோவென
விழி நீர் வடிப்பதும்
வாடிக்கையாகி விட்ட
வாழ்க்கை இது பலருக்கு

நிஜமாகவே
ஒன்றைப் பேசும் முன்
செய்யும் முன்
நிறைவேற்றும் முன்
ஒரு துளி நிதானத்தை

கொஞ்சம் பொறுமையை
ஒரு சொட்டுப் பணிவை
மனமுவந்து வெளிப்படுத்தல்
எத்தனை நலம்

காயங்களையும் கண்ணீரையும்
முடிந்த வரை தவிர்க்க!

• ஷப்ரா இல்முத்தீன்



இந்த மாலை நேரத்தில் யாரையாவது ஏன் எதற்கு
என்று காரண காரியம் இல்லாமல்
நொந்துக்கொள்ள  வேண்டுமென்றால்...
.... ஆல் என்ன
நொந்து கொள்ள வேண்டும் தான் என்று
தோன்றினால் கூட
உனக்கு நேர் எதிரில் சட்டகத்திற்குள் தொங்கிக்
கொண்டிருக்கும்
என்னை நொந்துக்கொள்
ஏனெனில் நான் மட்டும்தான்
ஆட்சேபனை ஏதும் தெரிவிக்காமல் உன்னை பார்த்து
சிரித்துக் கொண்டிருப்பேன் அன்பே

• கனியமுதுஅமுதமொழி



எனக்குள்
வெவ்வேறு நானாக
பரிணமித்துக் கொண்டே இருக்கிறேன்
எல்லாவற்றிலும்
ஆலாபனையாக நிறைகிறது
நீ எனும் சுவாசம்

பேரலைகளுக்கு நடுவே
சந்தடியின்றி
வீரியத்துடன் கரை தழுவும் சிற்றலையில்
நுரைத்திருக்கிறது
இதயத்தின் பிரார்த்தனை

உன் கடலில்
புதைப்படிவமாகி விடுவது
எனக்கான மோட்சம்

நாளைக்கே
உலகம் அழிந்துவிடும் போலான
பாவனையில்
அடர்த்தியாகும் முடிவிலி நீ
உலகின்
எல்லா மொழிகளைக் கற்றாலும்
உன்னை மொழிபெயர்க்க இயலாமல்
தடுமாறும் நாவிலி நான்

• தி.கலையரசி



ஆர்ப்பாட்டமில்லாத
உன் அன்பை
சொல்லிப் பாடிக் கொண்டிருக்கிறது
உன்னிடமிருந்து வந்த
தென்றல்....

இன்னும் உன் கனவுகள்
ஆழ்மனதின் அபிலாசைகள்
அனுபவங்கள் பற்றியும்
வாய் ஓயாமல் சொல்லி
உன்னைப் பற்றிய
என் கனவுகளை
நீட்டி வைக்கிறது....

கனவுகளுக்குள்
நித்தம் வரும் கனவு நீதான்
என்பதை சொல்லாமலே
அகல திறந்த கண்களுக்குள்
உன் கனவுகளை
இன்னும் சேமிக்கிறேன்....

வாய் வலித்த தென்றல்
பறந்த பின்பு தான்
புரிந்து கொண்டேன்
சொல்லாமலே ஊர் போன
உன்னை....

• அ.ராஜ்குமார்



## சல்லடையில் மிதக்கும் மீன்

தூண்டிலில் சிக்கிய
தனித்த மரணத்தையும்
வலைக்குள் கூட்டமாய்
உயிர்துறந்ததையும்
இருகண்களிலும் தேக்கிய பின்

எக்காயமும் இன்றி
சல்லடையால் பிடிபடுவதில்
எத்தீங்கும் இல்லையென்பதை
மகிழ்வாக்க மூன்றாவது
கண்ணைத் தேடுகையில்
வர்ண ஒளியிடை நீந்தலின் அயர்ச்சியில் துரிதமாக
உள்வாங்கிய செயற்கை
உயிர்க்காற்றுக்குள் நிதானித்து
அடங்கிய
தன் களிகூர் வாழ்வை மட்டும்
எக்கண்ணிலும் பதிவு செய்ய
முடியவே இல்லை.

• லாஸ்யா

வனம் பற்றிய கதை சொல்கிறேன்
விலங்குகள் ஆகிறார்கள்

வானம் பற்றிய கதை சொல்கிறேன்
பறவைகள் ஆகிறார்கள்

தங்களைப் பற்றிய கதைகளில்
தேவதைகள் ஆகி விடுகிறார்கள்
குழந்தைகள்.

• காசாவயல் கண்ணன்



சாப்பிட்டாயா என்பேன்
ஆம் என்பாய்
நலமா என்பேன் – அதற்கும்
ஆம் என்பதோடு நிறுத்தி விடுவாய்
பரிதாபத்திற்கும், கடமைக்கும்,
நாகரிகத்திற்குமாவது
பதிலுக்கு அதே கேள்விகளை
நீயும் கேட்டிருக்கலாம்
எதுவும் எனக்காக இல்லை
உனக்காக மட்டுமே இங்கே
ஊசலாடிக் கொண்டிருக்கின்ற
ஒன்றும் தெரியாத என்
உயிரைத் தக்க வைக்கத்தான்
பொய்மைக் கலந்த உன்
புன் சிரிப்பும் உபசரிப்பும் தேவைப்படுகிறது
விரக்தியின் விளிம்பில்தான்
“நான் இங்கே சாப்பிட்டேன் நீயும் அங்கே
சாப்பிட்டாயா”
“நான் இங்கே நலம் நீயும் அங்கே நலமா
இப்படி எல்லாம்
நீ கேட்காத கேள்விக்கும் கேட்டதாக எனக்கு நானே
பதில் அனுப்பி
தேற்றிக் கொள்கிறேன்...

• கதிரிளவன் இரவிக்குமார்

புத்தக வரிகளில் இரட்சண்யம் தேடும்
ஒரு மழைப்பொழுதின் தனிமைக்கு
இதமாய் ஒலிக்கிறது சில பாடல்கள்!

கூதல் காற்றை சில்லிடும்
இசையின் நாவிதங்களில்
மழுமழுக்கிறது உயிர்!

தனித்தற்ற தனிமைப் பொழுதுகளில்
மலரும் வார்த்தைகளின் மேல்
தேன்பூசும் பல நினைவுகள்!

கடிவாளமற்ற காட்டுப்பரிக்கு
இலக்கின்கண்
குத்திட்டு நிற்கும் அலைகளில்
ஆச்சர்யங்களின் வசீகரம்!

விறுவிறுத்த காலசக்கரத்தின்
நதிமூலம் தன்னில்
இப்படியாய் புறப்பாடு செய்கிறது
இந்த மழைப்பொழுது!

முற்றும் நனைந்தவளாய்
முணுமுணுக்கும் பாடல்களில்
களைகட்டுகிறது
வாழ்தலின் மந்தகாசங்கள்!

நின்று நிதானிக்க அவகாசமின்றி
வண்ணம் ஏற்றிக்கொள்கிறேன்
இந்த வானவில் மனதிற்கு!

• மின்மினி விமலா



குழந்தையின் ஓவியம்
ரசிக்க முடியவில்லை
வாடகை வீடு...

• ஐ.தர்மசிங்

வானத்திலிருந்து
நிலம்
நோக்கியும்,

நிலத்திலிருந்து
வானம்
நோக்கியும்,

பறக்கும்
ஒவ்வொரு முறையும்,

வானத்தின் கொஞ்சத்தை
நிலத்திற்க்கும்,
நிலத்தின் கொஞ்சத்தை
வானத்திற்கும்
தன் கால்களால்
கடத்திப் போகிறது,
பெயர் தெரியாத
அந்தப் பறவை....

• வினோத் பரமானந்தன்

கொட்டித் தீர்த்த முதல் மழை
உற்சாகத்தில் உறங்கவேயில்லை
தவளைகள்...!

• செ. பிரேமதாஸ்



அறை முழுவதும்
இல்லையெனினும்
ஏதேனும் ஓர் மூலையில்
ஒண்டிக் கொண்டு இருக்கிறது
வக்கிரம்.

• இரா. மதிபாலா

நானோ பத்திரப்படுத்தவே
முயல்கிறேன் ஆனால்
அவர்களோ சுலபமாக
தூக்கியெறிந்து விடுகிறார்கள்
ஒருவர் போல மற்றவர்
இருக்க வேண்டும் என்று
நினைப்பதும் கூட
ஒருவகையில் வன்முறை தானே.

• ராம்



மனம் ஒரு குரங்கு என்று யார் சொன்னது?
மனம் எப்பொழுதும் நிரந்தரமானது.
மனம் என்பது ஒரு புறம் நின்றுவிட்டால்
அது உள்ளபடியே உண்மையாக நின்றுவிட்டால்
அது தன்னிலை மாறாது.
அப்படி மனம் மாறினால்
அதற்கு குரங்கு என்று பெயர் சூட்டலாம்.
மனம் என்பது கலைடாஸ்கோப் அல்ல.
அது தனக்குள் பல வண்ணங்களை கொண்டிருக்க.
பல வண்ணங்களில் ரசனை இருக்கலாம்.
பல வண்ணங்களில் ஆசை இருக்கலாம்.
பல வண்ணங்களில் எதிர்பார்ப்புகள் இருக்கலாம்.
ஆனால் பல வண்ணங்களில் மனம் இருக்க
முடியாது.
மனம் என்பது சொதப்பல் போன்று இருந்தால்
மட்டுமே
பல வண்ணங்களில் இருக்கும்.
மனம், தெளிந்த நீரோடை போல் நிரந்தரமாக
ஓடிக்கொண்டே இருக்கும்.
தெளிந்த ஒரு வான்முகத்தை பார்த்தது போல்
இருக்கும்.
தெளிந்த ஒரு அதிகாலை சூரியனைப் பார்த்தது போல்
இருக்கும்.
அப்படி ஒரு மனம் தான் உண்மையானது.
அப்படி ஒரு மனம் தான் குழப்பமற்றது.
அந்த மனத்தில் தோன்றும் காதல்தான்
உண்மையானது.
அந்த மனத்தில் தோன்றும் காதல்தான் நேர்மையோடு
இருக்கும்.
அந்த மனத்தில் தோன்றும் காதல்தான் கடைசி வரை
அந்த காதலுக்காக ஏங்கும்.
அந்த ஏங்கும் மனம் எனக்கு வாய்த்திருக்கிறது.
அந்த மனத்தின் பின்னால் என்றும் நான்
இயங்குவேன்.

• யாழ் தண்விகா

கண்களை தவறவிட்ட கனவுகள்
ஏதோ ஒரு பேருந்தில் ஏறி ஏதோ
ஒரு நிறுத்தத்தில் இறங்கி எங்கு
இருக்கிறோம் என்று தெரியாமல்
மீட்பர் யாரும் இன்றி தவித்துக்
கொண்டிருக்கின்றன மீட்பரின்
கரங்களுக்காக

• கோ சிவா தமிழ்



## மறுபடியுமாய்...!

எல்லா அரசியல்வாதிகளும்
ஏதோ ஒரு புள்ளியில்
ஒருவருக்கொருவர்
கைகுலுக்கியபடி
ஒன்றிணைகிறார்கள்.

மேலும்
இறுக அணைத்துத்
தங்களின்
திருட்டு யுக்திகள்
தொடர்பில்
வெற்றிப் புன்னகைகளைப்
பரிமாறிக் கொள்கிறார்கள்.

மோப்பம் பிடிக்கப்படுகிற களவுகளிலிருந்து மட்டும்
ஒருவரையொருவர்
எப்படிக் காப்பாற்றிடலாம்
என்பதைத் தம்
தொண்டர்களுக்குப் புரியாத மீநுட்பங்களில்
உரையாடிக் கொள்கிறார்கள்.

எப்படியும்
அடுத்த திருவிழாக் கொண்டாட்டங்களில் வீசியெறியக்
கொஞ்சம் சில்லறைகள் தவிர மிச்சமெல்லாம்
ஏழுகடல்கள்..
எழுபது மலைகள் தாண்டிய தீவொன்றில்
தங்கமலைகளாய்
வளர விடுகிறார்கள்.

தொண்டர்கள்தான் பாவம்...
மறுபடியும்
மறுபடியுமாய்...
தம் எதிர்ப்பிலக்கியங்களை
அ ஆ... விலிருந்து ஆரம்பிக்கப்
புதிதுபுதிதாய்
எழுத்துக் கூட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

• எஸ். ஃபாயிஸா அலி



ஞாபகக் கிடங்குகளில்
இரவு முத்தங்களை போல
முக்கிய இடங்களை
கைப்பற்ற தெரியாதவை
பின் மதிய முத்தங்கள்...

அவை தனித்துவமானவை
சூதுவாதுஅறியாதவை
ஒளிவுமறைவற்றவை
இருட்டில் ஒளியாதவை
எவற்றோடும் கூட்டணி சேராதவை....

வெயிலின் தாக்கத்தில்
சூடேறிப் போயிருக்கும்
அறையின் வெப்பத்தை
குளிர வைப்பவை.....

மீதமிருக்கும்
பாதி பகலை
பரிசுத்தமாக்குபவை....

உலர்ந்த உதடுகளை
காதலின் ஈரத்தால்
நனைய வைப்பவை....

விழிகளை மூட வைத்து
இதழ்களின் மீது
வானவில் வரைபவை.....

காற்றுப்புகா சங்கமத்தில்
பூவும் பூவும்
முத்தமிட்டுக்கொள்வதை
வேடிக்கை பார்க்கும்
வெளிச்சத்தின் குறியீடுகள்...

• பிரபுசங்கர்.க

மழை வரப்போவதில்லை/
எதற்காக மின்னுகிறது/
பழுதான தெரு மின்விளக்கு.

• தா.பிரபுபாரதி




## பிஞ்சு மனம்

என் வானத்திற்கு
பல வண்ணங்கள்....
வர்ணாசிரமங்கள் இல்லை...
ஒவ்வொரு முகங்களும்
என் உறவுகள்...
ஜாதி மத பேதமில்லை
ஒவ்வொரு மடியும்
எனக்கானது
பொதுவுடமை பூமி
எனக்கே தெரியாமல்
நான் அழுகும் என் அழுகைக்கான
காரணங்களை யூகங்கள்
கணிக்கிறது ...
ரத்தம் பாலாவதை
உணராமல் பறந்து போகிறது
என் பசி...
தாய்மையெனும்
பட்டத்தை தந்து விட்டு
வந்த நான் படிக்கவில்லை....
நொடியும் நான்
அவசர சிகிச்சை பிரிவாய்
கண்காணிக்கப்படுகிறேன்....
அம்மா என்பதை
அறிந்து உச்சரிக்கும்
அந்த பொழுதிலிருந்து தொடங்குகிறது
என் பிறப்பிற்கான
பிரிவினை விழுதுகள்...

• அனீஸ் அஹமத்

எல்லாம் முடிந்தபிறகும்
வானம்
தனது ஈரத்தினை
துவட்டத் தொடங்கியது
வானவில் துண்டுகளுடன்..

• சே கார்கவி கார்த்திக்



## வயது ஒரு கட்டுரைத் தான்.....

ஒரு தமிழ் வருட பிறப்பின்
கடைசி நாளில் நின்று கொண்டிருக்கிறேன்....
நாளைய விடியல் என்பது புதிய வருடத்தின் தொடக்கம்
நாள்....

வருடத்தின் தொடக்க நாளில்
மனதை பாதித்த சம்பவங்கள்..... இன்றைய நாளில்
கூட பளிச்சென்று
கண்களுக்கு முன்பு தெரிகிறது....

மனதில் விருப்பத்தை
நிறைவேற்றும் நபர்களே எல்லா நாட்களிலும்
நிறைந்து இருக்கிறார்கள்....

நன்னடத்தை விதிகள் பொருந்தாது...
பொருத்தியும் கொள்ளாது
நினைத்ததை நினைத்துப் படி வாழ்பவர்களோடு
நானும் இருக்க வேண்டிய நிர்பந்தங்களின்படி
இருக்கிறேன்....

ஒவ்வொரு நாட்களும்
ஒவ்வொரு வாரங்களும் ஒவ்வொரு மாதங்களும்
இவ்வாறாகவே தொடர்கிறது வாழ்வியல்....

என்னை தொகுத்து
எழுதிய பக்கங்களை புரட்டிப் பார்க்கிறேன்....
சொல்ல வேண்டிய சொற்களால் நிறைந்திருக்கிறது....
என்னுடைய ஒரு வயதை ஒரு வருடத்தில் கடந்து
இருக்கிறேன்....
வயதும் ஒரு கட்டுரை தான்.....

• பன்னீர்செல்வம்

குடை மறைந்த நாட்களில்
மழையே குடை!

மழை நிற்கும் வரை
காத்திருக்கலாமே—
மழையில்!

சண்டை போடாதிருந்தால்...
எப்போதோ பிரிந்திருப்போம்!

என் காலத்தைக் குறைத்தவள் நீ.
முக்காலமெல்லாம் எனக்கு இல்லைஷி
இரண்டு காலம்தான்:
நீ இருந்த காலம்

மற்றும்
நீ உடன் இருந்த நினைவுகளோடு வாழும் காலம்.
இரண்டுமே
பொற்காலம்!

கனவிலாவது
வாயேன்.
கனவிலாவது
ஒரு கவிதை
நன்றாக எழுதிகொள்கிறேன்!

• அ.சீனிவாசன்



## அக்கா எனும் அரசி..

அறுவடை இயந்திரத்திலிருந்து
சேகரித்த நெல்மணிகள்
மூட்டைகளில் நிரப்பப்பட்டுக்கொண்டிருந்தன..
அவைகளில் கீழே சிதறிய
மணிகளை அக்கா தனது
கைகளில் ஒவ்வொரு மணியாய் விடுபாடின்றி அத்தனை அழகாய்ச்
சேகரித்துக்கொண்டிருந்தாள்...
கைகள் அணிந்திருந்த
வளையல்கள் தான் வைரம்
என்று பளீரிட்டு காட்டிக்கொடுத்துக்
கொண்டிருந்தது..
ஒரு நாட்டின் மகாராணியைப்போல
தோரணையில் எப்போதும்
அவளைப் பார்த்து வந்த எனக்கு
இது வியப்பாயிருந்தது...
நிமிர்ந்து என்னைப்பார்த்த
அக்காவுக்கு எனது வியப்பு
புரிந்திருக்க வேண்டும்..
இப்படி ஒவ்வொரு நெல்லும்
விதை நெல்தானே..
இந்த ஒரு நெல்லிலிருந்து
உருவாகி அது
தன்னைத்தானே தந்து
பசியாற்ற வந்ததல்லவா?
அதை வீணாக்க நமக்கு
உரிமையில்லை....ம்...
அக்கா இப்படித்தான் அரசியாய்
இருக்கிறாள்...

- ராணி கஸ்தூரி உடுமலைப்பட்டை



மின்சாரமில்லா இரவில்
எட்டிப் பார்க்கிறது வீட்டை
ஆசையில் தாம்பத்தியம்.

எவர் கண்ணுக்கும் தெரியாமல்
கடலில் நீந்தும்
மாய உப்பு.

பறவை அமர்வதற்கு வந்ததும்
இடமில்லை என யார் சொன்னது
சட்டென உதிர்ந்தது இலை.

அவசரத்துக்கு ஒதுங்கும் பெண்களை
எழுந்திருக்க கட்டளையிடும்
அதிகாலை இரயிலோசை.

கிளை விரித்த மரத்தில்
விழுந்த வெயில்
பரப்பியிருக்கிறது நிழலை.

ஓடியதுதான்
ஆடத் தொடங்கியது
கடலை சென்றடைந்த நதி

- நயினார்



எல்லோரும் என்னை விட்டு
போகிறார்களென வருத்தம்
கொண்டேன் !

ஒரு நாள் நானே
என்னை விட்டு போய்விடுவேனே?

நானே என்னை ஏமாற்றும்
போது நீங்கள் எப்படி
நிரந்தரமாய் நீடிக்க முடியும் !

- தமீம்.அசாருதீன்



## கண்டெடுக்கப்பட்ட சொல்

இன்று
பிரதான சாலையொன்றை
வண்டியில் கடக்கும்போது
கீழே கிடந்த சொல்லொன்றைக்
காண நேர்ந்தது

அவசரமாய் இறங்கி கையிலெடுத்தேன்

அது
யாரோ யாருக்கோ அன்பளிக்க
எடுத்துப் போகும் வழியில்
தவறவிட்டிருக்கலாம்

தெருச்சண்டையில்
மண்டை உடைக்க ஓங்கிய படபடப்பில்
கைதவறி கீழே விழுந்திருக்கலாம்

மணமக்களுக்கான அட்சதையில்
ஒன்றாக இருக்கலாம்

இறுதியூர்வலத்தில் தூவப்பட்ட
உதிரிப் பூக்களில் ஒன்றாய் இருக்கலாம்

சடலத்திற்கு தீமூட்டும்
கொள்ளிக் குச்சியாகவும் இருக்கலாம்

ஒரு தாய்
தன் மகவுக்கு ஊட்டிய
முதற்சோறின் பருக்கையாக இருந்திருக்கலாம்

ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு
வாங்கிப்போன தின்பண்டத்தில்
ஒன்றாக இருக்கவும் வாய்ப்பிருக்கிறது

நாளை உருவாகப்போகும்
ஒரு காட்டின் விதையாகவும் இருக்கலாம்

புலம்பெயர்ந்தவர்கள் வடித்த
கண்ணீர்த் துளியாகவும் இருக்கலாம்

போராட்டக்காரர்களைக் குறிவைத்த
தோட்டாக்களில் ஒன்றாகவோ
ஆணவக் கொலைசெய்யப்பட்ட
காதலர்களின் முத்தங்களில் ஒன்றாகவோ
இருக்கவும் வாய்ப்பிருக்கிறது

ஆயிரம் இருக்கலாம்களுக்கு
கதவு திறந்துவிடுமதன் அர்த்தத்தைத்
தெரிந்து கொள்ளும் அவசியம்
எனக்கு ஏனோ வரவேயில்லை

சொல்லின் அர்த்தம்
புழக்கத்தின் கைகளிலிருக்கிறது

யாரேனும் தேடி வந்தால்
ஒப்படைத்துவிடுவதென்னும் முடிவோடு
காகிதத்தில் பொதியப்பட்டிருக்குமதன்
மடிப்பு கலையாது
கையோடு எடுத்து வந்தேன்

இப்போது
இக்கவிதையில் ஒளிந்திருக்கும்
அச்சொல்லை
யாரெல்லாம்
எவ்வாறு அர்த்தப்படுத்தப் போகிறீர்கள்

• நேசன்.



## அனாதை

இலையுதிர்ந்த
மரங்களை
பறவைகள்
அனாதையாக்குவதில்லை.

- எபி.

## மழை

நின்ற பிறகும் மழை,
மரம் வளர்ப்பவனின்
வீட்டில்!

- மு.முபாரக்



வானவில்லை வீட்டிற்கு
அழைத்தேன்
விருந்து கொடுக்க...

என் அன்பில்
கரைந்த வானவில்
வானம் திரும்ப மறுத்து
என் விரலிடுக்குகளில்
ஒளிந்து கொண்டது...

மருதாணி சிவப்பில்
சிக்கி மேலும் மெருகானது
வனப்பில்
வளைந்த வண்ண
வானவில்...

வானம் வெயிலை
அனுப்பி வானவில்லை
அழைக்க விரலுக்குள்
மறைந்து  கொண்டு
வர மறுத்தது...

மேகத்தை அனுப்பி
மென்மையாக அழைக்க
மேலும் மேலும் ஓடி ஒளிந்தது...

நிலவின் நிழல்
நட்சத்திர நிகழ்வு
தென்றலின் தெம்மாங்கு
வாடையின் வசந்தம்
இப்படி

எதற்கும் மசியவில்லை
பேரழகு வானவில்...
இறுதியில் மழை வந்து
மண்டியிட
தாவிக்குதித்து

மனமொத்த மழையோடு
வானம் செல்ல துடித்தது
கண் இமைக்கும் முன்னே
மறைந்தது
என்னை வாரியணைத்து
வாழ்த்து சொல்லி
நெஞ்சமெங்கும் வஞ்சமில்லா
மகிழ்ச்சி  நிரம்ப வைத்தது
மனம் நிறைய நறுமணத்தை
அள்ளியள்ளி தந்தது!

• ஆ.விஜயலெட்சுமி



## சற்றே ஆசுவாசம் கொள்

அரைக்கம்பத்தில் பறக்கிறது
என் வீட்டுக்கு பக்கத்தில் இருக்கும்
கொடிக் கம்பத்தின் கொடி.

அனேகமாக அது தாளமுடியாத துக்கத்தின்
வெளிப்பாடாகத்தான் இருக்க வேண்டும்என்று
நினைக்கிறேன்.

உயரத்தில் பறந்துவிட்டு
பின் கீழிறங்குவதும்
பறப்பதும்
எத்தனை கடினம் தெரியுமா.?

கலங்காதிரு கொடி மரமே
எல்லாம் சில காலம் தான்

• கலைச்செல்வி



என்னில் பிறக்கும்
கவிதைகளுக்கான தலைப்புக்களை
எவரிடமும் கேட்பதில்லை

நான் எழுதிய பாதிக் கவிதையின்
மீதியைப் பிறிதொருவர்
எழுதக் கோருவதில்லை

எவரோ உதிர்த்த வரிகளை
எந்தன் எழுத்துக்கள் கொண்டு
முற்றுப்படுத்த முயல்வதில்லை

புனைவுகளுக்கேற்ற
படங்களைப் பார்த்துத் தர
எவரையும் ஏவுவதில்லை

இவற்றுள் ஏதொன்றில்
எவரோ ஒருவர் இருப்பின்
அவர் என் முன்னுரிமைகளில்
முந்திக்கொண்டவராய் இருக்கலாம்

எந்தன் ரசனைகளின்
ரசாயனங்களைப் போதியளவில்
அறிந்தவராக இருக்கலாம்

எந்தன் சித்தம் சொல்வதை
சித்தரிக்கிறேன்
என்னில் மொத்தமாய் உழல்வதை
விஸ்தரிக்கிறேன்

இவை கவிதைகளே இல்லை
என்றே கூறக் கேட்டாலும்
இன்னுமும் இஷ்டப்படி
விதைத்திடவே விழைந்திடுவேன்

திமிர் என்றால்
தனித்துவம் என்பேன்
கோடிகளில் கூடாது நிற்பதில்
இங்கு தவறேதுமில்லையே

• பாத்திமா சில்மியா



சாலையோர
மரங்களுக்கு மட்டும்
ஏன் இத்தனை சாபம்
அறையப்படும் ஆணிகளில்
அவ்வளவும் குருதியின் வாசம்
இயேசுவுமில்லை
அவரிறந்த இரவு இன்னும்
விடியவுமில்லை
விளம்பரப்பதாகைகளை மட்டுமே
வீதிமுழுக்க சுமந்துநிற்கும்
எல்லாமரங்களும்
கூடுதல் பொறுப்பை
கூடுமானவரையேற்றுக்கொண்ட
சிலுவைகள்தான்.

• கா.வெங்கடேஸ்வரன்

துண்டுத் துண்டாய்
வெட்டிக் கூறுபோட்டனர்
மரத்தின் நிழலை.!

• ச.ப. சண்முகம்

பிறக்கும் முன் பாலினம் கண்டறிவது குற்றச் செயல்
என்கிறது சட்டம்
இது எதையும்
அறியாதவள் தான்
சாமியாடி அருள்வாக்கு சொல்கிறாள்
விபூதி அள்ளிய கையோடு
கர்ப்பினியின்
தலை மீது கை வைத்து
தாயி உனக்குப் பிறக்கப் போறது ஆணு
அவனுக்கு சாமி பேர வய்யி
என்றவள்
உக்கிரம் குறையாத
அதே குரலோடு
மாயாண்டி னு பேரு வய்யி
என்று பெயரையும்
பரிந்துரைத்துவிட்டு
அடுத்தவளின் தலைக்கு
தாவுகிறாள்
அறிவியலை நம்பும் சட்டம்
சாமியின் அருள்வாக்கினை கண்டுகொள்வதில்லை



- மகேஷ் சிபி

வானம் வெயிலை
கடைபரப்ப
நிழல் விற்பனைக்கு
உண்டாவென யென்
கால்கள் தள்ளாடி
தேடிக் களைத்த
பொழுதொன்றில்...

என் செவிப்பறையை
கிழித்துச் செல்கிறது
ஓர் ஆன்ம கதறல்...

அது என்னவென்றறிய
அங்குமிங்கும் சுழல்கிறது
என் கூர் விழிகள் ...

இதோ அது என் வனத்தூரிகையின்
இதயத்தை பிளக்கும்
ஈனக்குரல்தான் ..

அத்துயர குரலில்
ஏதோவொன்று என்னிதயத்தை
தாக்க
தயங்கித் தயங்கி
அவ்விடம் செல்கையில்...

இது மரங்களின்
அறுவடை காலமென
சப்பைக்கட்டு கட்டும்
சுயநல மனிதர்களை விழியால்
துளைத்து...

கிளையற்ற தன் கரங்களில்
வழியும் குருதியினூடாய்
காடதிர கதறும்
வனமகளின் விழியில்
விரவிக் கிடக்கிறது
தகிக்கும் வெப்ப அலை...



• நிஷா ராஜேஷ்



## வாழ்தல்.....

எல்லோருக்கும்
எல்லா நேரத்திலும்
நம்மை
புரியவைத்ததுக்
கொண்டிருக்கவேண்டிய
கட்டாயம் இல்லை.

நம்மை புரிந்து கொண்டவர்களின்
உலகில்
நாம் நாமாகவும்
நம்மை புரிந்துகொள்ள மறுப்பவர்களின் உலகில்
நாம் வேறாகவும்
வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

அதனால் என்ன
நாம்,
வாழ்ந்துகொண்டுதானே
இருக்கிறோம்
அது போதும்.

- ஆ.சார்லஸ்

படைப்பு

சமூகத்தின் இணைப்பு

# சிறைவாசிகளுக்கு
# புத்தக தானம் செய்வீர்...!



**#ஒரு_நூல்_புரட்சி**

"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரிய எண்ணத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலை நூலகங்களுக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு நூல்களை சேகரித்துக் கொண்டிருக்கிறது **இலக்கிய படைப்பு குழுமம்.**"

புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி


இலக்கிய படைப்பு குழுமம்

#03, அஜந்தா டவர், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு, கோடம்பாக்கம், சென்னை-600 024.

Ph : +91 73388 97788

padaippu www.padaippu.com admin@padaippu.com